எந்தக் கல்வி நிலையமாவது மேற்கண்டவற்றை மீறி நடப்பது பள்ளிக் கல்வித் துறைக்கோ அல்லது அரசுக்கோ தெரியப்படுத்தப்பட்டால் அத்துறைகள் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : மத போதனை நடத்தப்படுவதைப் போல நாத்திகப் பிரச்சாரமும் நடைபெறுவதற்குக் கல்வித் துறையில் அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத போதனை நடத்துவதற்கு பள்ளி நேரங்களில் இடம் இல்லை. மத போதனை எல்லோருக்கும் நடத்தவும் முடியாது. குறிப்பிட்டவர்கள் இன்ன மத போதனை தங்களுக்கு வேண்டும் என்று எழுதிக் கேட்டு, வகுப்பு நேரங்கள் போக மற்ற நேரங்களில் செய்யலாம். ஆனல், 'நாத்திகம்' என்பது ஒரு மதமாக இல்லை. அது ஒரு கருத்தாகத் தான் இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : வேலூரிலுள்ள ஊர்ஹிஸ கல்லூரி போன்றவற்றில் மத போதனை மட்டுமல்ல, மத சம்பந்தமான சினிமாக் காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன. அதுவும் பாட நேரங்களில்—திங்கட்கிழமைதோறும் முதல் 'பீரியட்' மதம் பற்றிய படக் காட்சிகளோ மத போதனையோ நடத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன. மத போதனை விரும்புகிறவர்களுக்கு மட்டும் செய்யலாம். வகுப்பு நேரங்களில் மத போதனை செய்யக்கூடாது. விரும்புகிறவர்களுக்குத் தவிர மற்றவர்களையும் வற்புறுத்தும் நிலை இருக்குமானுல் அது பற்றி முறையீடு அளிக்கப்படுமானுல் அதன் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 91 முதல் 95 வரையுள்ள வினாக்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தபிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Sugar Control

*96 *Q.*—THIRU N. DENNIS :
THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to urge on the Union Government to impose partial control on sugar; and

(*b*) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) 1971 நவம்பர் திங்களிலிருந்து சர்க்கரை விலையில் உயர்வு காணப்பட்டதால், மாநில அரசு, மத்திய அரசை, சர்க்கரையின் சில்லறை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2-க்கு மேற்படாமல் வரையறுக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், பொதுமக்களுக்குக் கட்டுபடியாகும் விலையில் சர்க்கரை வழங்குவதற்காக மாநிலத்தின் சர்க்கரைத் தேவைகளை நிறைவு செய்ய, மாநில அரசிற்கு 50 சத வீதம் சர்க்கரை கிடைக்கச் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

Waste lands

* 97 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the extent of total cultivable waste lands in Tamil Nadu, district-war?

THE HON. THIRU P. U. SHANMUGAM: A statement @ is placed on the Table of the House.

உப்பளங்கள்.

* 98 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உப்பளங்கள் தற்போது எங்கெங்கு இயங்கி வருகின்றன?

(இ) அவற்றினை நவீன முறையில் செயல்படுத்த அரசு மேற்கொண்டு வரும் நடவக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்கரைப் பகுதிகளில் உப்பளங்கள் இயங்கி வருகின்றன.

(இ) தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட உப்பு மற்றும் இரசாயனத் தொழில் வாரியம் நவீன முறையில் உப்பு உற்பத்திக்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு அதன் பரிந்துரைகளை அவ்வப்போது வழங்கும்.

திரு. என் கிட்டப்பா: மாயூரம் தாலுக்காவிலுள்ள தரங்கம்பாடி கடற்கரையில் ஒரு உப்பளத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

@ 653 -ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.